**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in


பெறுநர், தேதி: 29.07.2025
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் "காலநிலை மாற்றத்தில் பெரிய தரவுகளைக் கையாளுதல்" என்ற தலைப்பில் கலந்துரையாடல்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தாவர மூலகூறுவியல் மற்றும் உயிரித்தொழில்நுட்பவியல் மையத்தில் 28.07.2025 அன்று அமெரிக்காவின் ஓக் ரிட்ஜ் தேசிய ஆய்வகத்தின் சுற்றுசூழல் அறிவியல் துறையின் ARM தரவு மைய இயக்குனர் முனைவர் கிரி பிரகாஷ் அவர்கள் "காலநிலை மாற்றத்தில் பெரிய தரவுகளைக் கையாளுதல்" என்ற தலைப்பில் மாணவர்களுடன் கலந்துரையாடினார். முனைவர் பிரகாஷ் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர். இவர் தனது இளங்கலை மற்றும் முதுகலை பட்டங்களை TNAU–ல் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. தாவர மூலகூறுவியல் மற்றும் உயிரித்தொழில்நுட்பவியல் மையத்தின் இயக்குனர் முனைவர் செந்தில் நடேசன் வரவேற்புரை ஆற்றினார்.

காலநிலை அறிவியலில் எதிர்கொள்ளும் சிக்கலான சவால்களை பெரிய தரவு தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதின் முக்கியத்துவத்தை அவர் விளக்கினார். காலநிலை வடிவங்களை மாதிரியாக்குதல், சுற்றுச்சூழல் தாக்கங்களை முன்னறிவித்தல் மற்றும் கொள்கை முடிவுகளை ஆதரிப்பதில் உயர் செயல்திறன் கணினி, தரவு ஒருங்கிணைப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றின் பங்கை அவர் வலியுறுத்தினார். பரந்த காலநிலை தரவுத்தொகுப்புகளை நிர்வகிப்பதிலும் விளக்குவதிலும் இடைநிலை அணுகுமுறைகளின் முக்கியத்துவத்தை அவர் எடுத்துரைத்தார்.

காலநிலை மாற்ற மாதிரியாக்கம், தரவு துல்லியம், இயந்திர கற்றல் பயன்பாடுகள் மற்றும் AI சார்ந்த காலநிலை ஆராய்ச்சியில் நெறிமுறை பரிசீலனைகள் குறித்த கேள்விகளை இறுதி மற்றும் மூன்றாம் ஆண்டு உயிரித்தொழில்நுட்பவியல் மற்றும் உயிரி தகவலியல் மாணவர்கள் எழுப்பினர். அனைத்து கேள்விகளுக்கும் முனைவர் கிரி பிரகாஷ் பொறுமையாகவும் உற்சாகத்துடனும் பதிலளித்தார்.

நன்றியுரையுடன் முடிவுற்ற இக்கலந்துரையாடலானது அறிவு பரிமாற்றத்திற்கான ஒரு தளமாகவும்  தரவு சார்ந்த காலநிலை தீர்வுகளில் மேலும் ஆய்வுக்கு உத்வேகம் அளித்ததாகவும் அமைந்தது.

*மக்கள் தொடர்பு அலுவலர்*